# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | 1)1939ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்கள் உள்ளிட்ட ஏனைய கேளிக்கைகள் மீது கேளிக்கை வரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்தன. இந்த சட்டம் நீக்கரவு செய்யப்பட்ட நிலையில், 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 01.07.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் திரைப்படங்கள் உள்ளிட்ட கேளிக்கைகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்தததைத் தொடர்ந்து, தமிழ் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ் திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சங்கங்கள் கேளிக்கைகள் வரியினை ரத்து செய்யவும், திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினுடைய விலையினை உயர்த்தவும் மற்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து உள்ளனர். இச்சட்டத்தின் மீது விதிக்கப்படம் கேளிக்கை வரியிலிருந்து உள்ளாட்சி மன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில், அரலசு பொத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களிக்கலாம் அல்லது கேளிக்கைகள் மீது விதிக்கப்பட்ட வரியை தள்ளுபடி ( Remission) செய்யலாம். இச்சங்கங்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக உள்ளாட்சி மன்றங்களின் கருத்துகளைப் பெற்று அனுப்புமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளதன் அடிப்படையில் (அரசு கடிதம் எண். 143781 தேர்தல்/ 2017–1 நாள் 1,.8.2017) நகராட்சி நிர்வாக ஆணையர் அதனை மேலனுப்பி மன்றத்தின் | 59) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கோரிக்கைகள் வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2017) பிரிவு 11ன் படி அச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியினை செலுத்தும் கட்டுப்பாட்டிலுருந்து அரசு பொருந்துமெனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, எந்த ஒரு கோரிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் வரிவிதிப்பதிலிருந்து விலக்களிப்பதற்கும் (EXEMPTION) செய்வதற்கும் மாமன்றம் தீர்மானம் இயற்றி அரசின் பரிசீலனைக்கு அனுப்பலாம் என்ற சட்ட வகைமுறைகளின் அடிப்படையில் மேற்படி கோரிக்கைகள் குறித்து மன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கருத்துக்களையும், பரிந்துரைகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டு கொண்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | அதன்படி மாநகராட்சிகளின் நலன் கருதியும் மற்றும் அரசுக்குள் கட்டுப்பாடுகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு, (1) அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு எந்த ஒரு கேளிக்கை கக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் கேளிக்கை வரி விதிப்பதிலிருந்து விலக்களக்கவும் (2) எந்த ஒரு கேளிக்கைகள் அல்லது கேளிக்கைகளின் வகைகள் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்தவொரு நபர் அல்லது நபர்களின் வகையினர் பொருந்தும் கேளிக்கை வரி முழுவதையும் அல்லது பகுதி எதனையும் முன் தேதியிட்டோ அல்லது பின் தேதியிட்டோ அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு கேளிக்கை வரிசை தள்ளுபடி செய்யவும் மற்றும் (3) மேலே சொல்லப்பட்ட கோரிக்கைகள் போன்று அரசு பொருத்தமெனக் கருதும் பிறவற்றின் மீது பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கவும் அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது. |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட ரோச் பூங்காவில் உள்ள 30மீ உயர்கோபுர மின் விளக்குகள் இரண்டின் பயன்பாட்டில் இருந்து வந்த மின் இணைப்பு கேபிள் வயர்கள் அதிக | 60) அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பளுவினால் Short circuit பழுது ஏற்பட்டு எரியாமல் இருந்து வருகிறது. இதனால் தற்போது நடைபெறும் நகரின் முக்கிய பனிமயமாதா திருவிழா நேரத்தில் பொது மக்கள் அதிகளவில் கூடும் சூழலில் விளக்கு இல்லாததால் மிகுந்த சிரமம் ஏற்படுவதுடன் பொதுமக்கள் பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளதை போர்க்கால அடிப்படையில் சரி செய்யும் பொருட்டு புதிய கேபிள் வயர்கள் மற்றும் தானியங்கி சுவிட்ச் அமைப்புகள் உடனடியாக பொருத்தி இயக்கும் பணியை அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்ட விதி 15ன் கீழ் மேற்கொண்டதற்கும், அதற்கு ஆன செலவினம் ரூ 75000/—யும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>பொது மக்கள் பாதுகாப்பு நலன் கருதி மாமன்றம் ஒப்புதல் வழங்கி பதிவு செய்யலாம். இ3/2974/17 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி ஐந்து ஊராட்சிகள் (அத்திமரப்பட்டி, மீளவிட்டான், முத்தையாபுரம், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல்) ஆகிய உள்ளாட்சி அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு அரசாணை எண்.7 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 19.09.2011ன் படியும் ஒருங்கிணைக்கப்பட்டு நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகின்றது. தற்போது நான்கு மண்டலங்களிலம் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது.<br><br>அரசு ஆணை (நிலை) எண்.237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 26.09.1996ல் வெளியிடப்பட்டுள்ள பணி விதிகளைப் பின்பற்றி பணியிடங்களை நிரப்பட்ட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 05.08.2008 தேதியில் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட பின்னர் இம்மாநகராட்சிக்கு 18 பணியிடங்கள் மட்டும் இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு போதிய பணியிடங்கள் இல்லாத காரணத்தினால் மண்டல அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டும் பணியாளர்கள் முழுமையாக இல்லாத காரணத்தினால் பணிகள் துரிதமாக செயல்படுத்த இயலவில்லை. எனவே தற்போதைய மாநகரின் வளர்ச்சிக்கேற்ப அவசர அவசியம் கருதி கீழ்க்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு 74 பணியிடங்கள் மண்டல அலுவலகங்களுக்கு புதியதாக தோற்றுவித்திட அனுமதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசின் அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேணடப்படுகின்றது. | 61) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | தேவையான கூடுதல் பணியிடம் |
|---|---|---|
| 1 | உதவி ஆணையாளர் | 3 |
| 2 | உதவி ஆணையர் (பணியமைப்பு) | 1 |
| 3 | உதவி ஆணையர் (கணக்கு) | 1 |
| 4 | உதவி ஆணையர் (வருவாய்) | 1 |
| 5 | நிர்வாக அலுவலர் | 1 |
| 6 | பொது மக்கள் தொடர்பு அலுவலர் | 1 |
| 7 | கண்காணிப்பாளர் | 2 |
| 8 | உதவி வருவாய் அலுவலர் | 1 |
| 9 | உதவியாளர்கள் | 6 |
| 10 | கணனி உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 11 | புள்ளி விபர கணனி தொகுப்பாளர் | 1 |
| 12 | சுருக்கெழுத்தர் | 2 |
| 13 | செயற் பொறியாளர் | 1 |
| 14 | உதவி செயற் பொறியாளர் | 3 |
| 15 | உதவி பொறியாளர் | 4 |
| 16 | இளநிலை பொறியாளர் | 1 |
| 17 | தொழில் நுட்ப உதவியாளர் | 14 |
| 18 | உதவி நல அலுவலர் | 1 |
| 19 | சுகாதார ஆய்வாளர்கள் (Sanitary Inspectors) | 6 |
| 20 | பகுதி சுகாதார செவிலியர் | 4 |
| 21 | மருந்தாளுனர் | 3 |
| 22 | நகர சுகாதார செவிலியர் | 13 |
| 23 | காவலர் | 3 |
| | மொத்தம் | 74 |

மேலும் கூடுதலாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கான மொத்த செலவினத் தொகை ஆண்டுக்கு ரூ 290.76 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசிற்கு பிரேரணை அனுப்பிட மாமன்றம்அனுமதிக்கலாம். சி1./13473/2011

| | | |
|---|---|---|
| | 4) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்கள் அனைத்திற்கும் மாநகராட்சியின் உரிய முறையில் கட்டிட அனுமதி பெற வேண்டும். ஆனால் பல கட்டிடங்கள் மாநகராட்சியில் முறையாக விண்ணப்பித்த கட்டிட அனுமதி பெறாமலும், கட்டிட அனுமதி வழங்கப்பட்ட கட்டிடங்கள் அனுமதி வழங்கப்பட்டதற்கு முரணாக கட்டப்படுவதும், மாநகராட்சியில் முறையான அனுமதி பெறாமலும் கட்டிடங்கள் கட்டப்படுவது தெரிய வருகிறது. | 62) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் மாநகராட்சியின் அனுமதியின்றி, விதிமுறைகள் மீறி கட்டிடங்கள் கட்டப்படுவது கட்டுமான விதிகளின்படி குற்றமாகும். எனவே முறையான அனுமதி பெறாத கட்டிடங்கள் மற்றும் விதிமுறைகள் மீறி கட்டப்படும் கட்டிடங்களுக்கு அபராதத் தொகை விதிக்கப்பட வேண்டும்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தத்கூடிய கோவை மாநகராட்சி சட்டம் அத்தியாயம் 10 பிரிவு 283ல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடங்கள் அனுமதி பெறப்பட்டு விதிமுறை மீறி கட்டப்படும் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு 9.00 சதுர மீட்டருக்கு ரூ 50/– வீதம் (1 சதுர அடிக்கு 0.52 பைசா) அபராதம் கணக்கிட ஒவ்வொரு அரையாண்டிற்கும் தொடர்புடைய கட்டிட உரிமையாளர்களிடம் வசூலிக்கப்பட வேண்டுமெனவும், மேற்படி அபராத கட்டணமானது (Penalty) மேற்படி கட்டிட விதி மீறல் சரி செய்யப்பட்டு மாநகராட்சி ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்படும் வரை சொத்து வரி போன்று ஒவ்வொரு அரையாண்டும் வசூலிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே தூத்துக்குடி மாநகரப் பகுதிகளில் இனி வருங்காலங்களில், அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் கட்டிட அனுமதிக்கு முரணாக கட்டப்படும் கட்டிடங்கள் குறைக்கும் விதமாக மேற்படி முரண்பாடான கட்டிடங்களுக்கு சொத்து வரி நிர்ணயம் செய்யும் நிலையில் சொத்துவரியுடன் அபராத கட்டணமும் நிர்ணயம் செய்து ஒவ்வொரு அரையாண்டு சொத்து வரியுடன் மாநகராட்சி சட்டம் அத்தியாயம் 10 பிரிவு 283ன் படி அபராத கட்டணம் வசூலிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறத.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். அ1/3435/2017 | |
| | **5)**தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் கழிவு நீரில் உற்பத்தியாகும் கொசு மற்றும் பூச்சிகளை ஒழிக்கக்கூடிய BT (Bacillus thuringiensis Var Israelensis) என்கிற மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தற்போது மிகக் குறைந்த அளவே இருப்பு உள்ளது. எனவே, மாநகராட்சியிலுள்ள 60 வார்டு பகுதிகளுக்கும் கொசு மற்றும் பூச்சிகளை ஒழிக்கக்கூடிய BT மருந்து தேவைப்படுவதால், Tamilnadu Meidcal Services Corporation Ltd. Chennai அவர்களின் அனுமதி பெற்ற M/s Biotech Internation Limited நிறுவனமாகிய தங்கள் நிறுவனம் மூலம் ஒரு கிலோ ரூ 1082.76 (Plus GST @18% Rs. 194.89 = Rs.1277.65) வீதம் 1000 கிலோ வாங்குவதற்கு | 63)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>அனுமதியும், அதற்காகும் செலவுத் தொகை ரூ. 12,77,650/– பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம் எச்2/7958/13</td><td></td></tr>
<tr><td></td><td>6) தூத்துக்குடி மாநகராட்சியானது மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மிடுக்கான நகரம் (Smart City) என தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களின் வசதிக்காக பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நவீன முறையில் செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு வகையில் செயல் திட்டம் தயார் செய்து வருகிறது.<br><br>மேற்படி செயல்திட்டம் முழு வடிவம் பெற்று நடைமுறைப்படுத்த ஏதுவாக பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி மாமன்றம் தனது தீர்மானம் எண்.55 நாள் 31.07.2017ல் தொழில்நுட்ப பாடப்பிரிவில் பயின்றுள்ள ஆர்வம் மிக்க 6 நபர்களை Intership முறையில் மூன்று மாதங்கள் விதிகளுக்குட்பட்டு பணிபுரிய அனுமதி அளித்துள்ளது.</td><td>64) அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| வ.எண் | கல்வித் தகுதி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | BE/ME Civil Engineer | 2 |
| 2 | B.Arch/M.Arch | 2 |
| 3 | BE Computer Science/ M.Sc Computer Science/ M.Tech Computer Science/ (IT Computer Science) BE(IT), ME(IT) | 2 |
| | **Total** | **6** |

மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி கல்வித் தகுதி வாய்ந்த கூடுதலாக ஆறு நபர்களை ஸ்மார் சிட்டி தொடர்பாக மாநகராட்சி நிர்வாகம் தயார் செய்திடும் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு மாநகராட்சி பணி குறித்த உரிய பயிற்சியினை Internship முறையில் மூன்று மாதம் மட்டும் பணிபுரிய உரிய விதிகளுக்குட்பட்டு அனுமதித்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

ஸ்மார்ட் சிட்டி தொடர்பான மாநகராட்சி பணிகளின் அவசர அவசியம் கருதி கல்வி தகுதி வாய்ந்த 6 நபர்களைகூடுதலாக Internship முறையில் மூன்று மாதம் மட்டும் பணிபுரிய மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/3209/15

| | | |
|---|---|---|
| | 7) தமிழக அரசின்முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் வரி மற்றும் வரியில்லா வருவாய் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்தவாறு உள்ளாட்சி பகுதிகளில் உள்ள அனைத்து கட்டிடங்களையும் மறு அளவீடு செய்யும் பணியானது தூத்துக்குடி மாநகரப் பகுதிகளில் தற்போது நடைபெற்று வருகிறது.<br><br>மேற்படி பணிக்காக மாநகராட்சிப் பணியாளர்களைக் கொண்ட 17 குழுக்கள் மூலம் கட்டிடங்கள் அளவீடு செய்யும் பணியானது நடைபெற்று வரும் நிலையில் மேற்படி பணியினை விரைந்து முடித்திட தூத்துக்குடி மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால், மேற்படி பணிக்காக தின ஊதியம் அடிப்படையில் டெங்கு தடுப்பு மற்றும் ஒழித்தல் பணிக்காக பயன்படுத்தப்படும் பணியாளர்களைப் போன்று தற்காலிகமாக 20 பணியாளர்களை ஒருமாத காலத்திற்கு மட்டும் மேற்படி கட்டிட அளவீடு செய்யும் பணியில் ஈடுபடுத்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு</u><br><br>அவசர அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி அனுமதிக்கலாம். அ1/3558/2017 | 65)அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 8) தூத்துக்குடி மாநகராட்சியில் ஆறு மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்வதற்காக மற்றும் புதிதாக பணியிடங்கள் தோற்றுவிப்பதற்காக பிறப்பிக்கப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்கள் 48 மற்றும் 201 நாள்கள் முறையே 22–05–2012 மற்றும் 23–12–2013 ஆகிய தேதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் சில பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கு தகுதி வாய்ந்த பணியாளர்கள் தூத்துக்குடி மாநகராட்சியில் முன்னுரிமைப் பட்டியலில் இல்லை.<br><br>இந்நிலையில் மேற்படி பணியிடங்கள் தவிர்த்து மாநகராட்சியின் அத்தியாவசியப் பணிக்காக கூடுதலாக 74 பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசு பிரேரணை அனுப்பபடவுள்ளது.<br><br>மேற்படி பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்திட அனுமதி அளிக்கப்படும் வரை நிர்வாக நலன் கருதி கீழ்க்காணும் பணியிடங்களுக்கு மட்டும் தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கலாம்.<br><br>1) உதவி ஆணையர் – வருவாய் மற்றும் கணக்கு – 1<br><br>2) நிர்வாக அலுவலர் – 1<br><br>3)உதவி வருவாய் அலுவலர் – 1<br><br>4) கணக்கு அலுவலர் – 1<br><br>5)கண்காணிப்பாளர்கள் – 2<br><br>மேற்படி பணியிடங்களுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்படும் பணியாளர்கள் தற்போது பணிபுரிந்து வரும் பணியிடத்திற்கான ஊதிய நிலையில் பின்னாளில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக கூடுதல் பொறுப்பு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். சி1/21375/2008 | 66) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி